நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஜீன் திங்கள் 4–ம் நாள் வியாழக்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.780/2026
CNR.No.TNTS02-002206-2026
IN
CSR.No.48/2024

சுப்பையா,
த/பெ.சிவகுமார் ... மனுதாரர்

/எதிர்/

அரசுக்காக ஆய்வாளர்,
தென்காசி சைபர் கிரைம் காவல் நிலையம்,
சைபர் கிரைம் CSR.No.48/2024 ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது இன்று விசாரணைக்காக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.புவனேஸ்பொன்பாலகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில் இரு தரப்பையும் கேட்டு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

மனுதாரர் பிரிவு 497 மற்றும் 503 BNSS–ன் கீழ் தாக்கல் செய்துள்ள இம்மனுவின் சுருக்கம் பின்வருமாறு ...

<u>உத்தரவு</u>

மனுதாரர் தரப்பில், தான் வழக்கில் மனுதாரர்/புகார்தாரர் ஆவேன் என்றும், தன்னிடம் இணைய வழியில் சுமார்.2,57,517/– பணத்தை மோசடி செய்தது தொடர்பாக வாதி காவல்நிலையத்தில் மோசடி செய்தது தொடர்பாக தான் வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மேற்படி புகாரின் பேரில் CSR.No.48/2024 ஆக மனு ரசீது வழங்கி வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வழக்கானது இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகின்றது என்றும், மேற்படி வழக்கில் வாதி காவல்துறையினர் வழக்கு எதிரிகளை கண்டிருந்து மேற்படி தொகையை வாதி காவல்துறையினர் Freez செய்து வைத்துள்ளனர் என்றும், மேற்படி செலுத்தப்பட்ட தொகைகளை வாதி போலீசார் மேற்படி வங்கிகளிலிருந்து Freez செய்துள்ள தொகைகளை தனது வங்கி கணக்கறிற்கு தற்காலிகமாக செலுத்த உத்தரவிட வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது என்றும், எனவே வாதி போலீசார் Freez செய்துள்ள தொகைகயை தனது வங்கியான ஸ்டேட்

பேங் ஆப் இந்தியா தென்காசி கிளை வங்கி சேமிப்பு கணக்கு எண். 31827417334 (IFSC CODE: CNRB0000928) என்ற தனது வங்கி கணக்கு மூலம் தனது வசம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்.

2. அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள பதில் அறிவிப்பில், வழக்கின் புகார்தாரரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு லோன் தருவதாக ஆசை வார்த்தை கூறி ரூ.2,57,517/- வங்கி கணக்கிலிருந்து மனுதாரருக்கு தெரியாமல் எடுத்து விட்டதாக புகார்தாரர் கொடுத்த புகாரின் பெயரில் எதிரியின் வங்கி கணக்கில் கீழ்கண்டவாறு பணம் முடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும்,

| வ. எ ண். | எதிரியின் வங்கி கணக்கு விபரம் | | புகார்தாரர் எதிரியின் வங்கி கணக்கில் செலுத்திய பணம் | எதிரியின் வங்கி கணக்கில் முடக்கம் செய்யப்பட்ட பணம் | புகார்தாருக்கு திரும்ப கிடைக்க தகுதியான பணம் |
|---|---|---|---|---|---|
| | Account Holder Name | A/c.No.& Bank Name | | | |
| 1. | Vishal Kumar Delhi | 922010024938365 Axis Bank | Rs.1,14,517/- | Rs.3,388/- | Rs.3,388/- |
| 2. | JITENDER New Delhi | 8345639985 | Rs.20,000/- | Rs.28,257/- | Rs.20,000/- |
| 3. | Jitendar Delhi | 38991443329 State Bank of India | Rs.33,000/- | Rs.61,597/- | Rs.33,000/- |
| 4. | Shivam West Delhi | 157064253635 Indusland Bank | Rs.90,000/- | பணம் இல்லை | பணம் இல்லை |
| மொத்தம் | | | Rs.2,57,517/- | Rs.93,242/- | Rs.56,388/- |

இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள எதிரியின் வங்கி கணக்குகளிலிருந்து முடக்கம் செய்யப்பட்டுள்ள Rs.56,388/- பணத்தை பாதிக்கப்பட்ட புகார்தாரருக்கு திரும்பப்பெற்று தந்து உதவுமாறும், அதற்கு எந்தவித ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. வழக்கு ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது, வழக்கின் புகார்தாரரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு லோன் தருவதாக ஆசை வார்த்தை கூறி ரூ.2,57,517/- வங்கி கணக்கிலிருந்து மனுதாரருக்கு தெரியாமல் எடுத்து விட்டதாக புகார்தாரர் கொடுத்த புகாரின் பெயரில் எதிரியின் வங்கி கணக்கில் கீழ்கண்டவாறு பணம் முடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள எதிரியின்

வங்கி கணக்குகளிலிருந்து முடக்கம் செய்யப்பட்டுள்ள Rs.56,388/- பணத்தை பாதிக்கப்பட்ட புகார்தாரருக்கு திரும்பப்பெற்று தந்து உதவுமாறும், அதற்கு எந்தவித ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், தக்க ஜாமீன்தாரர் அடிப்படையில் மனுதாரரின் மேற்படி பணம் Rs.56,388/- மனுதாரரிடம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. கீழ்கண்டவாறு எதிரிகளின் வங்கி கணக்கில் இருந்து முடக்கம் செய்யப்பட்ட தொகையில் இருந்து மனுதாரர் கணக்கு வைத்துள்ள ஸ்டேட் பேங் ஆப் இந்தியா தென்காசி கிளை வங்கி சேமிப்பு கணக்கு எண். 31827417334 (IFSC CODE: CNRB0000928) க்கு கீழ்க்கண்ட அட்டவணையில் இறுதி காலத்தில் குறிப்பிடப்பட்டவாறு தொகையை இடைக்காலமாக செலுத்த உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | எதிரியின் வங்கி கணக்கு விபரம் | | புகார்தாரர் எதிரியின் வங்கி கணக்கில் செலுத்திய பணம் | எதிரியின் வங்கி கணக்கில் முடக்கம் செய்யப்பட்ட பணம் | புகார்தாருக்கு திரும்ப கிடைக்க தகுதியான பணம் |
|---|---|---|---|---|---|
| | Account Holder Name | A/c.No.& Bank Name | | | |
| 1. | Vishal Kumar Delhi | 922010024938365 Axis Bank | Rs.1,14,517/- | Rs.3,388/- | Rs.3,388/- |
| 2. | JITENDER New Delhi | 8345639985 | Rs.20,000/- | Rs.28.257/- | Rs.20,000/- |
| 3. | Jitendar Delhi | 38991443329 State Bank of India | Rs.33,000/- | Rs.61,597/- | Rs.33,000/- |
| 4. | Shivam West Delhi | 157064253635 Indusland Bank | Rs.90,000/- | பணம் இல்லை | பணம் இல்லை |
| மொத்தம் | | | Rs.2,57,517/- | Rs.93,242/- | Rs.56,388/- |

<u>நிபந்தனை:-</u>

1. மனுதாரர் Rs.56,388/-க்கு தான் சொந்த பிணை பத்திரமும், தனி ஒரு நபர் பிணைப் பத்திரமும் எழுதித் தரவேண்டும்.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் ஜீன் திங்கள் 4-ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI Digitally signed by MUTHU LAKSHMI Date: 2026.06.02 08:11:29 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.